[2003 ஏப்ரல் 25

அமைத்துத் தர மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு முன்வருமா என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விடுதியில் 10 மாணவர்கள்தான் தங்கிப் படிப்பதாகச் சொல்கிறார்கள். ஆகவே, முறையாகத் தகவல் கொடுத்தால் கண்டிப்பாக நம்முடைய புரட்சித்தலைவி அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுக்கும். குறைவாகத் தங்கிப் படிக்கின்ற விடுதிகளில், அதிகமான எண்ணிக்கை வரக்கூடிய விடுதிகளுக்கு ஈடுசெய்வது போலத்தான், நம்முடைய அரசு அனைத்து மாணவர்களும் தங்கிப் படிக்கின்றவகையில், விரும்பி வருகின்ற மாணவர்களைச் சேர்த்துக்கொண்டுதான், இப்போது தங்கிப் படித்து வருகிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினருடைய கருத்தை தனியாக அனுப்பி வைத்தால் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 330, திரு. த. ஆறுமுகம், மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்.

330—

மின் வசதி

***19029—திரு. த. ஆறுமுகம்:**

மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவொற்றியூர் நகரப் பகுதியிலுள்ள அனைத்துக் கிராமங்களுக்கும் மின் வசதி செய்து கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்: மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): திருவொற்றியூர் நகராட்சிக்குட்பட்ட அனைத்துக் கிராமங்களுக்கும் ஏற்கெனவே மின் வசதி செய்து கொடுக்கப்பட்டுவிட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2003 ஏப்ரல் 25]

திரு. த. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்ததுபோன்று அனைத்துப் பகுதிகளுக்கும் மின் விளக்கு வசதி அமைத்துத் தரப்பட்டிருககிறது. மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களுக்கும் அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இருப்பினும், திருவொற்றியூர் தொகுதியிலே பல்வேறு இடங்களிலே மின் அழுத்தம் குறைவாக இருக்கின்ற காரணத்தால், குறைவாக இருக்கின்ற பகுதிகளான திருவொற்றியூர் மேற்குப் பகுதி 41-வது வட்டத்திலிருந்து, 47-வது வட்டம், இராஜா சண்முகம் நகர், டாக்டர் ஜெ.ஜெ. நகர், டாக்டர் அம்பேத்கர் நகர் மற்றும் மணலி பேரூராட்சிப் பகுதிகளிலே இருக்கின்ற 16-வது வட்டத்திலிருந்து, 18-வது வட்டம், ஆமுலவாயல் 1-வது பகுதி, 2-வது பகுதி, வைக்காடு கிராமம் மற்றும் புழல் ஒன்றியத்திலுள்ள மாத்தூர் 1-ஆம் பகுதி, 2-ஆம் பகுதி, சின்னசேக்காடு பேரூராட்சியில் இருக்கின்ற 10-வது வட்டத்திலிருந்து, 15-வது வட்டம் வரையில் இருக்கின்ற பகுதிகளில் குறைந்தழுத்த மின்சாரம் இயங்கிக் கொண்டிருக்கிறது. கிராமப்புறம் மற்றும் குடிசைவாழ் மக்கள் அதிகமாக இருக்கின்ற காரணத்தால், அந்தப் பகுதிகளிலே 100 கிலோ வாட் ஆர்ம்ஸ் உள்ள டிரான்ஸ்பார்மர் அமைந்திருக்கிறது. அவற்றிலே சுமார் 200, 250 மின் இணைப்புகள் இருக்கின்றன. அதேபோன்று 250 கிலோ வாட் ஆர்ம்ஸ் இருக்கின்ற டிரான்ஸ்பார்மரில் 400-க்கும் மேற்பட்டு, 500 இணைப்புகள் வரை இருக்கின்றன. இந்த நிலை தொடர்ந்து இருக்கிற காரணத்தால் அடிக்கடி low-voltage ஏற்பட்டு, அதன்மூலமாக அந்த டிரான்ஸ்பார்மரில் உள்ள காயில் பழுதடைந்து மற்றும் அதனுடைய oil dry ஆகி, டிரான்ஸ்பார்மரே சிதைகின்ற சூழ்நிலை ஏற்படுகின்றது. இந்த நிலை தமிழகத்தில் அனைத்துக் கிராமப் பகுதிகளிலும் இருக்கின்ற ஒரு நிலை. எனவே, டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இதுபோன்ற நிலைமையிலிருந்து குறைந்தது 150 இணைப்புகள் உள்ள பகுதிகளுக்கு 250 கிலோ வோல்ட் டிரான்ஸ்பார்மர் பொருத்துவதோடு மட்டுமல்லாமல் 400 இணைப்புகள் உள்ள பகுதிகளுக்கு 500 கிலோ வோல்ட் டிரான்ஸ்பார்மர்கள் பொருத்தி...

முற்பகல் 10-55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்விக்கு வாருங்கள்.

திரு. த. ஆறுமுகம்: இந்தப் பகுதிகளுக்குத் தடையின்றி மின்சாரம் தருவதற்கான சூழ்நிலையை மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்தெந்தப் பகுதிகளில் மின் அழுத்தக் குறைவுகள் இருக்கின்றன என்று சொல்கிறார்களோ, அந்த பகுதிகளில் மின்னழுத்தக் குறைவினை சரி செய்வதற்கு மின்மாற்றிகள் அமைத்து மின் அழுத்தக் குறைவினை சீர் செய்து, சரி செய்து தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 331, திரு. கா.பூ. முனுசாமி, மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்.

331—

புனல் மின் நிலையங்கள்

***19838—திரு. கா.பூ. முனுசாமி:**

மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புனல் மின் நிலையங்களிலுள்ள இயந்திரங்கள் தற்போதைய அறிவியல் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சிக்கு ஏற்றவாறு மாற்றப்பட்டுள்ளதா?

(ஆ) அவ்வாறு மாற்றாமல் இருந்தால் அதை மாற்ற அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா?

மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) கடந்த 10 ஆண்டுகளில் கட்டப்பட்டுள்ள புனல் மின் நிலையங்களில் நவீன அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சிக்கு ஏற்றவாறு சாதனங்கள் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. தற்போது கட்டுமான நிலையில் இருக்கும் புனல் மின் நிலையங்களிலும் இத்தகைய சாதனங்கள் நிறுவப்பட்டு வருகின்றன.

(ஆ) மின் கட்டமைப்பின் தேவையையும் நிதி ஆதாரங்களையும் கருத்தில் கொண்டு நவீனமயமாக்கும் பணிகளைச் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.